DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No. 107/2022**

Deposition of Witness for – Prosecution : PW1
Defence :

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெப்ரி பெர்னான்டஸ் | ஜாதி | : |
| த/பெ | : | மதம் | : |
| கிராமம் | : புதூர் | தொழில் | : தனியார் நிறுவனம் |
| வட்டம் | : அம்பத்தூர் | வயது | : 70/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி - 27.05.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி: PW1**

எனது மனைவியின் பெயர் நிர்மலா பெர்னான்டஸ் இல்லத்தரசியாக இருந்து வருகிறார். வருமான் ஏதும் இல்லை என்றால் வீட்டு வாடகைகள் வாங்கி வருகிறார். என் மனைவி வருமான வரி தாக்கல் செய்து வருகிறார் என்றால் இல்லை. வீட்டு வாடகை என்னிடம் தருவதால் நான்தான் வருமான வரி செலுத்திவருகிறேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எத்தனை முறை எதிரியிடம் பணத்தை திரும்ப கேட்டேன் என்றால் பலமுறை கேட்டேன். எதிரியடம் பணம் கொடுக்கும் பொழுது பிணையாக ஆவணம் எதுவும் வாங்கவில்லை. எதிரியிடம் பணம் தருவதற்காக உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் கூறுவது போல் உண்மையாக எதிரி எனக்கு பணம் தரவேண்டி இருந்தால் முறையே வழக்கறிஞர் அறிவிப்பின் கடன் உறுதி சீட்டை கொண்டு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்கு கடன் உறுதி சீட்டில் உள்ள கையெழுத்து யாருடையது என்று எனக்கு தெரியாது. கடன் உறுதி சீட்டில் ஜெப்ரி பெர்னான்டஸ் என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. புகார் மனு, பிரமாண வாக்கு மூலத்தில் கூறியுள்ளவாறு எதிரி எனக்கு எந்த கடன் உறுதி சீட்டும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2018 ஆம் ஆண்டு எதிரி என்னிடம் கடனாக வாங்கப்பட்ட 1,00,000

திற்கு CSB வங்கி பரிவர்த்தனை மூலம் ரொக்கமாக பணத்தை திருப்பி செலுத்திய பின்பும் பிணையாக வாங்கிய காசோலையை நானே நிரப்பி இந்த பொய்வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல் ல. எதிரியின் அப்பா தற்பொழுது உயிருடன் இலலை காலம் ஆகிவிட்டார். காயத்திரி என்பவர் எனக்கு தரவேண்டிய கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் இல்லை. காயத்திரி மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. காயத்திரி தான் என் மீது வழக்கு கொடுத்துள்ளார். நான் கூறுவது போல் எதிரி என்னிடம் ரூ. 4,00,000/- கடனாக வாங்கவில்லை என்றும் 4,00,000 ற்கான காசோலை எதுவும் எதிரி தரவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு 4,00,000 தர வேண்டி கடப்பாடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய போது எதிரி ஊரில் இல்லாததால் உடனே பதில் அறிவிப்பு அனுப்ப இயலவில்லை என்றால் சரியல்ல.

K. Mahasakthi
B.B.A.L.L.BHons

Digitally signed by K. Mahasakthi B.B.A.L.L.BHons
Date: 2025.06.06 10:13:35 +0530